# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2011 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தல் (திருத்தச்) சட்டம்

---

*(2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011*, யூன் மாதம் 24 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 2.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2011 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க,**
**பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தல்**
**(திருத்தச்) சட்டம்**

[2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. 26/2008

**1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்.

**2.** 1994 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தல் சட்டத்தின் 24 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சட்டத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐம்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப் பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "அந்தத் தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும் :" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அந்தத் தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்:" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

2-PL 006012 -1,090 (2011/04)

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*